# தமிழில் சொற்ச்சூழல் பொருண்மை ஆய்வு

*முனைவர் பா. சந்திரமோகன்*
இணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மலர்: 4

இதழ்: 3

மாதம்: ஜனவரி

வருடம்: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

## ஆய்வுச்சுருக்கம்

*உலகில் இன்று ஏறத்தாழ ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் வழக்கில் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. வளம் நிறைந்த மொழிகள் ஒவ்வொன்றும் தனக்கென தனியானதொரு ஒலியமைப்புகளையும், சொல்லமைப்புகளையும், பொருண்மை அமைப்புகளையும் கொண்டு வழக்கில் உள்ளன. இந்நிலையில் ஒரு மொழியில் வழங்கும் சொல்லையும் அதன் பொருளையும் அடுத்த மொழியோடு ஒப்பிடும் போது நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. ஒலியனியல், சொல்லியல், பொருண்மையியல் மற்றும் வாக்கிய நிலை என்று அனைத்து நிலைகளிலும் இதனைக் காண முடியும். இதற்கு காரணம் சொல் மற்றும் சொல்லிற்கான பொருள் சமூகத்திற்கு ஏற்ப, பயன்படும் இடத்திற்கு ஏற்ப மாறுபடுவதேயாகும். மொழிப் பயன்பாடு, பயன்பாட்டுச் சூழல் என்ற ஆய்வு களங்கள் சார்ந்த சொற்ச்சூழல் பொருண்மை பற்றி ஆராய்ந்து இவ்வாய்வு விளக்குகிறது.*

*முக்கியமான சொற்கள்: பொருண்மை, பல்பொருண்மை, ஒருசொல்போலி, சூழல், கருத்தாடல், பயன்வழியியல், மொழியியல் புலப்பாடு, இருநிலை வழக்கு*

### முன்னுரை

மொழி பேசும் சமூகத்தினர் தங்களின் வசதிக்கு ஏற்ப, சூழ்நிலைக்கு தக்கவாறு சொற்களுக்கான பொருண்மையை நீட்டி / குறுக்கி அல்லது மாற்றிப் பயன்படுத்துகின்றனர். இதனை மொழிப் பயன்படும் காலத்திற்கேற்ப நிலைமுறை முறையிலும், வரலாற்று நிலையின் அடிப்படையிலும் ஆய்வு செய்யும் போது நன்கு விளங்கும். சொல்லியியல் அல்லது சொற்பிறப்பியல் அடிப்படையில் ஆராயும்போது சொல்லிற்கான பொருண்மை, அல்லது புலன், மாற்றம், அல்லது நீட்டம், அல்லது குறுக்கம் பெற்று வருவதற்கு சூழலே முக்கிய காரணம் என அறிய முடியும்.

### ஆய்வின் நோக்கம்

புற உலக அறிவு, கருத்தாடல், பயன்வழியியல், மொழியியல் புலப்பாடு, பேச்சுநடை மற்றும் பேச்சுமுறை, கிளைமொழி வேறுபாடு, இருநிலை வழக்கு, சமுதாய, கலாச்சார மற்றும் பொருளாதார மாற்றங்கள் போன்றவை சொற்களுக்கான பொருண்மையை அவற்றின் சூழலில் இருந்து அறிய பெரும் துணை நிற்கிறது.

சொற்களை அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையிலும் சொற்களுக்கான பொருண்மை விளக்கத்தை சூழல் அடிப்படையில் எவ்வாறு பயனுள்ள வகையில் அளிக்க முடியும் என்ற ஆய்வு நோக்கில் இக்கட்டுரை அமைக்கப் பெற்றுள்ளது.

**சூழல் சார்ந்த பல்பொருண்மை ஆய்வுகளும் அதன் மதிப்புரையும்**

பால் ஹார்விச் (2004) என்பவரின் பொருண்மையியல் கோட்பாடானது சொல்லின் பொருண்மையைப் பார்க்காதே, பயன்பாட்டைப் பார் என்ற கருத்தை உணர்த்துகிறது. அதாவது சொல்லின் பொருண்மை அதன் பயன்பாட்டைச் சார்ந்ததாகும். இவரின் கருத்துப்படி சூழல், மொழிக்கு வெளியிலுள்ள சூழலையும் உள்ளடக்கும். ஜெ.ஆர்.ஃபிர்த் என்பவரின் கருத்துப்படி சொற்கள் அது இணைந்துவரும் சொற்களுடன் அறியப்படும். மேலும் சொல்லின் பொருண்மையானது அதன் பொருண்மை களம் என்றும் அதற்கு இரண்டு பரிமாணங்கள் இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். அவை தொடரமைப்பு பரிமாணம் மற்றும் அடுக்கு உறவு பரிமாணம் ஆகும். இலக்கணப் பிழையின்றி உருவாக்கப்பட்ட சொல்லின் சாத்தியமான சூழல்கள் இயல் நிலையில் வரிசை முறைப்படி அமைக்கப்படுவது தொடரமைப்பு பரிமாணம் என்றும் சொல்லிற்கு சாத்தியமான பதிலீடுகள் இயல்நிலை வரிசை முறையில் அமைக்கப் படுவது அடுக்கு உறவு பரிமாணமும் ஆகும்.

**பல்பொருண்மை மற்றும் ஒரு சொல்போலி**

ஒரு சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் இருப்பது இயல்பாகும். இப்பொருள்களுக்கு இடையே அறிவு பூர்வமான தொடர்பு இருக்கும் அல்லது இல்லாமலும் இருக்கும். சான்றாக “படி” என்ற சொல் தரும் பொருண்மையை அறிவுபூர்வமாக தொடர்புபடுத்த முடியாது படி1 (நடக்கும் படி) படி 2 (அளக்கும் படி) படி 3 (புத்தகம் படி). இதில் சொல் ஒன்றேயன்றி அது தரும் பொருள்கள் எந்த நிலையிலும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாக இல்லை. அதே சமயம் கால் என்ற சொல் தரும் பொருண்மையை தொடர்புபடுத்த முடியும் (கால் - 1. மனித / விலங்கு உடல் உறுப்பு, 2. நாற்காலி/மேஜை கால், 3. பந்தல் கால், 4. முகூர்த்த கால்). இதில் சொல் ஒன்றாக இருப்பதோடு அது தரும் பொருள் ஒன்றை தாங்கியிருப்பதை குறிப்பதால் தொடர்புள்ளதாக இருக்கிறது. பொருண்மையியல் அறிஞர்கள் தொடர்பு படுத்த முடியாத பொருண்மை சார்ந்த சொற்களை ஒருசொல்போலி என்றும் தொடர்புபடுத்தக் கூடிய பொருண்மைச் சொற்களை பல்பொருண்மை என்றும் கூறுவர்.

**சூழல் பொருண்மை / புலன் அறிதல்**

சொல் அது வழங்கிவரும் சூழலுக்கு ஏற்ப பல நிலைகளில் பொருண்மை ஏற்று வருகின்றது என்பதை முன்னரே பார்த்தோம். இந்நிலையில் சூழலை பல்வேறு வகைகளாகப் பிரித்து மொழியறிஞர்கள் விளக்குகின்றனர். அவையாவன,

**அண்மைச் சூழல்**

தொடரில் அல்லது வாக்கியத்தில் அமையும் சொல்லின் சொற் பொருண்மை அச்சொல்லுக்கு முன்னோ அல்லது பின்னோ தொடர்ந்து வரும் நிலைக்கு ஏற்ப அறியப்படும் சூழல் அண்மைச் சூழல் எனப்படும். இதனை சொற்கள் சூழ்ந்து வரும் நிலைக்கு ஏற்ப நான்கு அமைப்புகளில் பகுத்துணரலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அமைப்பு- 1 | இ.சொ. | பல்பொருண்மைச் சொல் | வ.சொல் | | |
| அமைப்பு- 2 | இ.சொ. | பல்பொருண்மைச் சொல் | வ.சொல்-1 | வ.சொல்-2 | |
| அமைப்பு- 3 | இ.சொ-1 | இ.சொல்-2 | பல் பொருண்மைச் சொல் | வ.சொல் | |
| | இ.சொ-1 | இ.சொல்-2 | பல் பொருண்மைச் சொல் | வ.சொல்-1 | வ.சொல்-2 |

இச்சூழலில் ஆய்வு செய்யும்போது சொற்களுக்கான பொருண்மையை அண்மைச் சொல்லின் அடிப்படையில் பின்வரும் நிலையில் பெறலாம்.

சொல் : எ.கா.

| அண்மைச் சொல் | சிறப்புப் பொருள் |
|---|---|
| தண்ணீர் எடு | கொண்டுவருதல் |
| பணம் எடு | பெறுதல் |
| துணி எடு | வாங்குதல் |
| ஆள் எடு | பணியமர்த்தல் |
| படம் எடு | உருவாக்குதல் (திரைப்படம்) |
| படம் எடு (பாம்பு) | தலையை உயர்த்தி விரித்தல் |
| பல் எடு | பிடுங்குதல் |
| விழா எடு | நடத்துதல் |

**தொடர் / வாக்கியச் சூழல்**

தொடர்/ வாக்கியத்தில் சொல் அமையப் பெற்றிருக்கும் இடத்திற்கு ஏற்பவும், சொற்களுக்கு இடையேயான உறவின் அடிப்படையிலும் சொற்பொருண்மை அமைகிறது. வாக்கியத்தில் உள்ள சொற்களைப் பிரித்து ஆராய்வதன் மூலமும், மரபுத்தொடர், உருவகம், உவமை ஆகியவற்றின் அடிப்படையிலும் சொற்பொருண்மை கையாளப்படுகின்றன. சான்றாக சொற்களைப் பிரித்து அராய்தல் என்பது சொல் வகைகளின் அடிப்படையில் பெயர், வினை, பெயரடை போன்றவற்றின் மூலம் பொருள் கொள்வதாகும். படி, ஓடு, ஆடு, அடி, நாடு போன்ற பல சொற்கள் தமிழில் பெயர்ச்சொற்களாகவும், வினைச் சொற்களாகவும் வழக்கில் உள்ளன. வேற்றுமை உருபுகளுடன் வரும் அடிச்சொல் பெயருக்கான பொருளையும், காலம் காட்டும் இடைநிலையுடன் வரும் அடிச்சொல் வினைக்கான பொருளையும் தந்து நிற்கும்.

பெயர் / வினை வகைப்பாடு

சூர்யா கல்லூரியில் படி-க்கிறான்
படி-யில் அரிசி இருக்கிறது
சஹானா பரதம் ஆடு-கிறாள்.
வயலில் ஆடு-கள் மேய்கின்றன.

மேற்கூறிய வாக்கியங்களை பார்க்கும் போது “படி” என்ற அடிச்சொல் நிகழ்காலம் காட்டும் இடைநிலையோடு வரும்போது ‘Study’ என்ற பொருண்மையோடும் அதே சொல் -இல் என்ற இடவேற்றுமையோடு வரும் போது “measuring vessel” என்ற பொருளோடும் அறியப்படுவது பெயர் மற்றும் வினை வகைப்பாட்டின் மூலமாகவே அமைகிறது.

**உருவகம்**

**காது**

1. அவள் காதில் தோடு அணிந்திருக்கிறாள்.
2. பை காது / வாணல் காது பிடித்து தூக்கினான்.

**உவமேயம்**

**திருபுவனம்**

1. அவன் திருபுவனம் சென்றுள்ளான்.
2. அவள் தன் திருமணத்திற்கு திருபுவனம் எடுத்தாள்.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளை பார்க்கும் போது ‘காது’ என்ற சொல் தரும் ஒப்பீட்டு பொருள் உருவகமாகவும் “திருபுவனம்” என்ற சொல் உவமேயப் பொருளையும் தருவதை காணமுடிகிறது. இவை போன்ற சொற்கள் வாக்கிய அமைப்பில் வரும்போது பொருள் மாற்றம் பெற்று வருவது இயல்பாகும்.

**கருத்துச் சூழல்**

எழுத்துமொழி அல்லது பேச்சுமொழி என்று எதுவாக இருந்தாலும் எந்த தலைப்பை / கருத்தை மையமாகக் கொண்டு அமைக்கப் பெறுகிறதோ அதைச் சார்ந்தே சொற்பொருள் விளக்கமும் அமையும். அதாவது சொல்லிற்கான பொருள் உணிரக்கோவையின் போது அது சார்ந்திருக்கும் கருத்தைக் கொண்டு அமைகிறது. சான்றாக பச்சை என்ற சொல்லை எடுத்துக்கொள்வோமேயானால் அச்சொல் பயன்படும் இடத்திற்கு ஏற்ப பொருண்மையை கொடுக்கும். பச்சை சட்டை, பச்சைப் பிள்ளை, பச்சை மீன், பச்சைத் தண்ணீர், பச்சை மண், பச்சைப் பொய், பச்சை உடம்புகாரி போன்ற பல சொற்கள் வழக்கில் உள்ளன.

| சொல் | பொருள் |
|---|---|
| பச்சை சட்டை | பச்சை நிற ஆடை |
| பச்சைப் பிள்ளை | வயதில் சிறிய பிள்ளை |
| பச்சை மீன் | வருக்காத/ சமைக்காத மீன் |
| பச்சை தண்ணீர் | சூடாக்காத குடிநீர் |
| பச்சை மண் | விவரம் அறியா குழந்தை |
| பச்சை பொய் | தெரிந்தே சொல்லும் பொய் |
| பச்சை உடம்புகாரி | குழந்தை பெற்ற பெண் |

இங்கு பச்சை என்ற சொல் வருமிடம் அனைத்திலும் நிறத்தைக் குறிப்பதில்லை. இச்சொற்கள் உரையாடலிலோ, வாக்கியத்திலோ வரும்போது குறிப்பிடப்படும் கருத்தின் தன்மைக்கு ஏற்ப மேற்கூறியவாறு பொருளமைந்து வழங்கி வருகிறது.

**உலகியல் சூழல்**

அண்மைச்சூழல், வாக்கியச்சூழல் மற்றும் கருத்துச் சூழல் மட்டுமன்றி மீத்திறன் மொழியியல் அறிவு நிலையிலும் கருத்தூண்ற வேண்டியது அவசியமாகிறது. இச்சூழலில் நாம் முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் பொருளறிக் கோட்பாட்டுடன் சொல்லிற்கான குறிபொருள், உணர்பொருள், மற்றும் மறைபொருள் போன்றவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. சான்றாக மொழி பயன்படும் இடம், பயன்படுத்தும் நபர் யார் என்ற நிலைக்கேற்ப மதிப்புடைய வழக்கு, மதிப்பற்ற வழக்கு, நிலை வழக்கு, கிளைமொழி வேறுபாடு என்று பல்வேறு தன்மைகளில் வழங்கப்பெற்று வருகிறது. இவ்வாறு வழங்கும் மொழியின் சொற்பொருண்மையைக் கையாளுவதே இங்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

எ.கா.

அவன் புத்தகப்புழு, புத்தகத்தைக் கரைத்துக் குடித்துவிட்டான்.

குமார் சோற்றைப் பாத்திக்கட்டி அடிக் கிறான்.

குமார் தண்ணி அடிக்கிறான்.

கமலா தண்ணி அடிக்கிறாள்.

மேலே கூறிய வாக்கியங்களில் வரும் புத்தகப்புழு, கரைத்துக் குடி, பாத்திக் கட்டி அடி, மற்றும் தண்ணி அடி போன்ற சொற்கள் அதற்கான சொற்பொருளை தருவதில்லை. மாறாக மொழிக்கு அப்பாற்பட்டு உலகியல் அல்லது சமுதாயம் சார்ந்த பொருளைப் பெற்று வருகிறது. சோற்றைப் பாத்திக்கட்டி அடிக்கிறான் என்றால் அதிக அளவில் சாப்பிடுகிறான் என்று அளவையும், தண்ணி அடி என்பது குமாருடன் வரும் போது மதுவையும் அதே சொல் கமலாவுடன் வரும் போது குழாய் வழியே எடுக்கும் குடிநீரையும் குறிப்பது உலகியல் அல்லது சமுதாயம் சார்ந்த பொருளாகும்.

## முடிவுரை

எழுத்தியல், உருபனியல், உருபொலியன், சொல்லியல், பொருண்மையியல், தொடரியல், பனுவல், இலக்கணம், சொற் பிறப்பியல், உருவகம், உரைக்கோவை, மற்றும் பயன்வழியியல் போன்றவற்றோடு உலகியல் அறிவு என்ற அனைத்து தகவல்களை ஒருங்கே பெற்று பொருண்மை கொள்வது பொருண்மை மயக்க மின்மைக்கும், சூழல் பொருண்மைக்கும் முக்கியமானதாக கருதவேண்டியுள்ளது. புற அமைப்பு அல்லது எழுத்து முறையை மேலெழுந்தவாரியாக பார்க்கும் போது இவை அனைத்தையும் பெறலாம் என்பது முடியாத ஒரு செயலாகும். எனவே தாய்மொழியாளர்களின் உள்ளுணர்வோடு ஏற்புடையதாக உள்ள வெளிப்படையான மற்றும் உள்ளார்ந்த சொல்விளக்கம் கருத்துப் பரிமாற்றத்திற்கும், கணினி மொழியியல் ஆய்விற்கும், இயந்திர மொழிபெயர்ப்புக்கும் அவசியமாகும்.

## துணை நூல்பட்டியல்

1. ALLAN, Keith. 2001. Natural Language Semantics. Oxford: Blackwell Publishers.
2. DASH, Niladri Sekhar. 2005a. Role of context in word sense disambiguation. Indian Linguistics. 66 (1-4): 159-175.
3. Mark Aronoff, Janie Rees – Miller, 2017, The Handbook of Linguistics, John Wiley & Sons.
4. MILLER, George A. and Leacock, Claudia 2000) Lexical representations for sentence processing. In RAVIN, Yael and LEACOCK, Claudia (eds.), Ploysemy: Theoretical & Computational Approaches. New York: Oxford University Press Inc. Pp. 151-160.
5. Paul Horwich, 2004, A Use Theory of Meaning, Philosophy and Phenomenological Research, Vol. 68, No. 2 (Mar., 2004), pp. 351-372.